(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 21.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2022 ஒக்தோபர் 06 வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

27/2022

கௌரவ புத்திக பத்திரண,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தங்கம், வெள்ளி மற்றும் இரும்பு சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்கின்ற கைத்தொழிலாளர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பிரதேசங்கள் தொடர்பில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பிரதேசங்கள் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கின்ற மேற்குறிப்பிட்ட கைத்தொழில்களில் பாரம்பரியமாக ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட கைத்தொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அப் பிரச்சினைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு புதிய தொழில்நுட்பம் மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின், அது எவ்வாறென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இடையீடு செய்யப்பட்டிருப்பின், அது எவ்வாறென்பதையும்;

(v) இவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(vi) இன்றேல், வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட கைத்தொழிலாளர்களின் உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நாடுகள் யாவை என்பதையும்;

(iii) 2015 மற்றும் 2016 ஆகிய ஒவ்வொரு வருடத்திலும் மேற்குறிப்பிட்ட பொருட்களின் ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

295/2022

கௌரவ வசந்த யாப்பாபண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி கங்கையை அண்டியதாக கன்னோருவ, வராதென்ன பிரதேசத்தில் “ஹத்கிந்த” என்றபெயரில் சுமார் 59 ஹெக்டெயார் பரப்பளவுகொண்ட இயற்கையான ஒரு தீவுக்கூட்டம் காணப்படுகிறது என்பதையும்;

(ii) அந்தச் சூழல் தொகுதியின் தனிச்சிறப்பான உயிர் பல்வகைமை காரணமாக இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமாகவிருந்த அப்பிரதேசமானது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்திற்கமைய 2017.06.13 ஆம் திகதி “வராத்த ஹத்கிந்த சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசம்” எனப் பெயரிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் அங்கு அனுமதியற்ற கட்டடங்களை அமைக்க வேண்டாமெனத் தெரிவித்து அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) மேற்படி சூழல் தொகுதி அழிந்துபோகும் வகையில் தனியார் ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும்;

(v) கண்டி நகரசபையின் எல்லையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டடங்கள், மகாவலி கங்கை மாசடைவதற்கு ஏதுவாக உள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கன்னோருவ தொடக்கம் புதிய தொடம்வல பாலம் வரை நிர்மாணிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி சூழல் தொகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டிடங்களை அகற்ற இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

341/2022

கௌரவ ஹேஷா விதானகே,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொலிஸ் சேவையில் இன்றளவில் 20 மற்றும் 10 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள பொலிஸ் காவலர்களின் (கொஸ்தாபல்) எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) தற்போது 10 அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள பொலிஸ் சாஜன்ட்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தர்களில் பதவியுயர்வுகளைப் பெறுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு இதுவரை பதவியுயர்வுகள் வழங்கப் படாமைக்கான காரணங்கள் யாவை;

(iii) பதவியுயர்வுகளைப் பெறுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை பொலிஸின் சகல உத்தியோகத்தர்களுக்கும் பதவியுயர்வுகளை வழங்குவதற்கான திட்டமொன்று உள்ளதா;

(iv) ஆமெனில், அது நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

673/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள மகாவலி வலயங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மகாவலி வலயங்களின் கீழுள்ள விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

966/2022

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாதாந்த வருமானத்திற்கமைவாக வறுமைக் கோட்டின் கீழுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலானோருக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அதற்கான காரணம் யாது;

(iii) அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1105/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்களினால் குப்பைகள் அகற்றப்படுவதன் விளைவாக உருவாகியுள்ள குப்பை மேடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குப்பை மேடுகள் அமைந்துள்ள இடங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி குப்பை மேடுகளில் காடுகளை அண்டியதாக காணப்படும் குப்பை மேடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி குப்பை மேடுகள் காரணமாக சூழல் தொகுதிக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி குப்பை மேடுகளினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1513/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் சேவையாற்றுகின்ற விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையினர் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iii) மேற்படி பதவியில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவற்றை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) வட மாகாணத்துக்கு மேற்படி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(vi) வட மாகாணத்துக்கு மேற்படி உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு புதிய சேவை பிரமாணக் குறிப்பு இல்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதனைத் தயாரிக்கும் திகதி மற்றும் விதம் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் சிலரின் ஓய்வூதியத்தை கணக்கிடுகையில் அவர்கள் விவசாய ஊக்குவிப்பாளர் மற்றும் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக சேவையாற்றிய காலப்பகுதி கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இவர்களுக்கு மேற்படி சேவை காலப்பகுதி எவ்வாறு எத்திகதியில் வழங்கப்படுமென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

1527/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் கீழ் இன்றளவில் உற்பத்தி செய்யப்படும் மின்சார அலகுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) 2022 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் கீழ் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் மின்சார அலகுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) சூரிய சக்தியின் மூலமாக இன்றளவில் உற்பத்தி செய்யப்படும் மின்சார அலகுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) சூரிய சக்திக்கு மேலதிகமாக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஏனைய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் கீழ் 2022 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் மின்சார அலகுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அநுராதபுர மாவட்டத்தின் திரப்பனை பிரதேச செயலகப் பிரிவில், லபுனோறுவை, சந்தரம்குளம் கிராமத்தில் கிளைரிசிடியா மரத்துண்டுகளைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மின் உற்பத்தி நிலையமொன்று அமைந்துள்ளது என்பதையும்;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையம் தற்போது செயலிழந்து காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

3040/2022

கௌரவ நிரோஷன் பெரேரா,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென்னை ஆராய்ச்சி நிறுவனம் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகையைச் செலுத்தியுள்ளதா என்பதையும்;

(ii) இல்லையெனின், அந்நிறுவனத்தினால் மேற்குறிப்பிட்ட ஆண்டுகளுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அத்தொகையை ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட நிறுவனத்தினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தப்படாமை தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

3146/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய சட்டங்களை விதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அப்போதைய நீதி அமைச்சர் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடலொன்றை சிங்கப்பூர் அரசாங்கத்துடன் நடத்தியுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) சமூக ஊடகங்கள் பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 2 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— சிறப்புரிமை,— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சமன்பிரிய ஹேரத் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2022 ஒக்தோபர் 04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 118 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2022 ஒக்டோபர் 03 ஆம் திகதிய 2300/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*3.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

நொத்தாரிசு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

அற்றோணித் தத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

ஆவணங்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

அபாயகரமான விலங்குகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

விருப்பாவணங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

சிறுகோரிக்கை நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18

புனர்வாழ்வுப் பணியகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 நவம்பர் 24 ஆம் திகதிய 2255/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*20.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 64(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61(1)(ஆ) ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 பெப்ரவரி 07 ஆம் திகதிய 2266/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*21.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஏப்ரல் 25 ஆம் திகதிய 2277/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*22.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 மார்ச் 31 ஆம் திகதிய 2273/76 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.08.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

23\.
சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24\.
சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25\.
புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26\.
வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27\.
ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28\.
மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29\.
சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30\.
சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31\.
இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32\.
அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33\.
ஶ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34\.
சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35\.
கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36\.
இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.
இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.
சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.
தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.
சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.
சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.
றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.
“மாத்தறைப் பருவம்” அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.
ரதன திஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.
ஷைலி கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.
களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.
தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.